சென்னை-32.
09 JUL 2020

<u>சுருக்கம்</u>

பொதுப் பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வேளாண்மைத் துறை – வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை – கருணையடிப்படையில் பணி நியமனம் – திருமதி. பி. காயத்திரி, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை (வே.வி.1) துறை

அரசாணை (3ப) எண்.129 நாள்: 29.06.2020

திருவள்ளுவர் ஆண்டு 2051,
ஆனித் திங்கள் 15–ஆம் நாள்.

படிக்கப்பட்டவை:

1. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரின் கடித எண். விகுப.3/31371/2018, நாள் 06.09.2019 மற்றும் 31.10.2019.
2. அரசாணை (நிலை) எண். 100, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள் 01.08.2018.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.

-----

<u>ஆணை:</u>

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரின் கடிதத்தில், வேலூர் விற்பனைக்குழுவில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து 25.07.2013 அன்று இயற்கை எய்திய திரு இரா. விநாயகம் அவர்களின் வாரிசுதாரர் / மனைவி திருமதி. பி. காயத்திரி, என்பவருக்கு 29.11.2016–ஆம் நாளிட்ட தமது செயல்முறை ஆணையின்படி, வேலூர் விற்பனைக்குழுவில் இளநிலை உதவியாளராகக் கருணையடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, 19.12.2016 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும், மேற்படி பணியாளருக்கு இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 19.12.2016 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து அரசாணை வழங்கிடக் கோரி கருத்துரு மற்றும் ஆவணங்களை அனுப்பியுள்ளார்.

2) மேலும், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையில் பணியிடங்கள் அனைத்தும் அரசினால் தோற்றுவிக்கப்பட்டதாலும், அமைச்சுப் பணியின் கீழுள்ள இளநிலை உதவியாளர் பணியிடம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வரையறைக்குள் உள்ளதாலும், திருமதி. பி. காயத்திரி, என்பவர் வேலூர் விற்பனைக் குழு தலைமை அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக கருணையடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, 19.12.2016 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். எனவே, வேலூர் விற்பனைக்குழுவில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றிவரும் திருமதி. பி. காயத்திரி, அவர்களின் பணியை பணியில் சேர்ந்த நாளான 19.12.2016 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

(த.பி.பா.)

3) இந்நிலையில், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை பணிவரன்முறை செய்வது தொடர்பாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெற வேண்டும் என்ற நடைமுறை கைவிடப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4) வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று வேலூர் விற்பனைக்குழுவில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி. பி. காயத்திரி, இளநிலை உதவியாளர், வேலூர் விற்பனைக்குழு என்பவரின் பணியை அப்பதவியில் அவர் அப்பதவிக்குரிய உடல் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, தனியர் பணியில் சேர்ந்த நாளான 19.12.2016 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணையிடுகிறது.

5) திருமதி. பி. காயத்திரி, இளநிலை உதவியாளரின் பணி 19.12.2016 முற்பகல் முதல் அப்பதவியில் வரன்முறை செய்யப்படுவதால், அவர் வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் சம்பள நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராவார் எனவும் அரசு ஆணையிடுகிறது.

6) இவ்வரசாணை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண் 6193/Q1/2020-1, நாள் 18.06.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் அ.சா.எண் 14897/ஜி2/2020-1, நாள் 24.06.2020-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர், சென்னை-32
செயலாளர், வேலூர்விற்பனைக்குழு, வேலூர்.
(வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர்,
சென்னை-32 மூலமாக)
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/(பெயரில்)
முதன்மை மாநிலக் கணக்காயர் (G & SSA) சென்னை-18
முதன்மை மாநிலக் கணக்காயர் (E & RSA) சென்னை-18
இருப்பிடத் தணிக்கை அலுவலர்,
முதன்மை மாநில கணக்காயர் (பொது மற்றும் சமூகப்பிரிவு தணிக்கை) அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை-9.

<u>நகல்</u>

இயக்குநர், உள்ளாட்சி நிதிக்கணக்குகள் மற்றும் தணிக்கைத் துறை, சென்னை-108.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை-9
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை-9.
வேளாண்மை (அநமு) துறை, சென்னை – 9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர் 29/6/2020
29/6/20